செ.வெ.எண்:44 நாள்:27.02.2017

# அரியலூர் மாவட்டத்தில் கொள்ளிடம் ஆற்றிலிருந்து கிராமம் மற்றும் குக்கிராமங்களுக்கு குடிநீர் வழங்கும் நீரேற்று நிலையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (27.02.2017) நேரில் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், நதியனூர், வைப்பூர் மற்றும் தா.பழூர், ஜெயங்கொண்டம் ஆகிய பகுதிகளில் நடைபெற்று வரும் குடிநீர் வழங்கும் நீரேற்று நிலையம், நீர் உறிஞ்சி கிணறு மற்றும் நீர்சேகரிப்பு கிணறுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (27.02.2017) ஆய்வு மேற்கொண்டார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் கோடைக்காலங்களில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் தேவையை பூர்த்தி செய்திடும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பணிகள் நடைபெற்று வருகிறது.

இதில், திருமானூர் ஒன்றியம், தா.பழூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஆகிய ஒன்றியங்களிலுள்ள கிராமங்களுக்கு 20-க்கும் மேற்பட்ட ஊராட்சிகள் மற்றும் குக்கிராமங்களுக்கு நதியனூர் கொள்ளிடம் ஆற்றில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு 4.5 மீட்டர் அகலமும், 8 மீட்டர் ஆழமும் கொண்ட கிணற்றிலிருந்து குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் சுமார் 713680 லிட்டர் நாள் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அனைத்து கிராமங்களுக்கும் பொதுமக்களின் அடிப்படை தேவையான நீர் தங்குதடையின்றி வழங்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், குடிநீர் ஆதாரத்தை மேம்படுத்தும் விதத்தில் நீர் உறிஞ்சி கிணற்றில் உள்ள மணல்களை அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. பணிகளை துரிதமாக செய்ய குடிநீர் வாடிகால் வாரிய பொறியாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி, திட்ட அலுவலர் (மகளிர்திட்டம்) திரு.கதிரவன், உதவி நிர்வாக பொறியாளர் திரு.நாகானந்த், நீர்நிலை ஆய்வாளர் திரு.தர்மலிங்கம், உதவி பொறியாளர் திரு.சிவசங்கரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.